பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

08 10 2026 06 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்கள் குறித்து கருத்து கூறுவதற்கு பாகிஸ்தானுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி குழுமக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.
- மாநிலத்தில் இளம் மற்றும் முதன்முறை வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கான சிறப்பு முகாம்கள் தேவைக்கேற்ப மாவட்டங்களில் வரும் 10 ஆம் தேதி நடைபெற உள்ளன.
- மாநிலத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு குறைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.
- ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியின் தொடக்க நிகழ்ச்சியில் பாரா விளையாட்டு வீரர்கள் பிரமோத் பகத்தும், பவினா படேலும் தேசியக்கொடியை ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><><><>

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்கள் குறித்து, கருத்து கூறுவதற்கு பாகிஸ்தானுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று மாநிலங்களைவைத் துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ் தெரிவித்துள்ளார்.

தான்சானியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச நாடாளுமன்ற யூனியன் பொதுச்சபைக் கூட்டத்தின் போது, காஷ்மீர் குறித்து பாகிஸ்தான் தெரிவித்த சில தேவையற்ற கருத்துகள் தொடர்பாக பதிலளித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பிரிக்க முடியாத பகுதி என்றும், திரு. ஹரிவன்ஷ் அப்போது குறிப்பிட்டார்.

<><><><><><><><><>

சரக்கு மற்றும் சேவை வரி குழுமக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில், சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான விவகாரங்களுக்கு தீர்வுகாண்பது தொடர்பான சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

தற்போதுள்ள நிர்வாக தடைகளை நீக்கி எளிமைப்படுத்துவது குறித்தும், சிறிய வணிக நிறுவனங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

சரக்கு மற்றும் சேவை வரியில் தற்போதுள்ள சிரமங்களை களையும் வகையில் ஐந்து அம்ச திட்டங்கள் இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட உள்ளது.

அத்துடன், சிறிய வரி செலுத்துவோர் வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்ய வேண்டிய எண்ணிக்கையை குறைத்தல், சிறு வணிகங்களுக்கு பல மாநிலங்களின் பதிவுகளை நீக்குதல் உள்ளிட்டவையும் இக்கூட்டத்தில் முன்மொழியப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><><><><>

மாநிலத்தில் இளம் மற்றும் முதன்முறை வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கான சிறப்பு முகாம்கள் தேவைக்கேற்ப மாவட்டங்களில் வரும் 10 ஆம் தேதி நடைபெற உள்ளன.

இதுதொடர்பாக மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், முதன்முறை மற்றும் இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதை அதிகரிக்கும் வகையில், நகர்ப்புற பகுதிகள் மற்றும் பெருநகரங்களில் சிறப்புக்கவனம் செலுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டப்பேரவை தொகுதிகளில் புதிய வாக்காளர்களை சேர்ப்பதற்கான இந்த சிறப்பு முகாம்கள் வரும் 10 மற்றும் 11 ஆம் தேதிகளில் நடைபெறும் என்று மாவட்ட தேர்தல் அலுவலரும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருமான டாக்டர். ஜி.எஸ். சமீரன் தெரிவித்துள்ளார்.

மொத்தம் உள்ள 4 ஆயிரத்து 79 வாக்குச்சாவடி மையங்களிலும் இப்பணிகள் நடைபெறும் என்று அவர் கூறியுள்ளார்.

<><><><><><><><><><><>

மாநிலத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு குறைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னை மருத்துவக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மருத்துவக் கல்லூரிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியை தொடங்கிவைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், டெங்கு காய்ச்சலை தடுக்க அரசு சார்பில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

டெங்கு கொசு ஒழிப்பு பணிகளில் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும், தங்களுடைய வீடு மற்றும் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்காமல் தூய்மையுடன் பராமரிக்க வேண்டும் என்றும் திரு. அருண்ராஜ் கேட்டுக்கொண்டார்.

<><><><><><><><><>

பயணிகளுக்கான சாலை உணவகங்களில் தரமற்ற உணவு விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் உணவக உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. விஜய் தமிழன் பார்த்திபன் கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே நேற்றிரவு பயணவழி உணவகம் ஒன்றில் ஆய்வு மேற்கொண்ட அவர், அங்கு தரமற்ற உணவுகள் விற்பனை செய்வதை அறிந்து, அந்த உணவகத்தின் உரிமையாளர் மீது சட்டரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

<><><><><><><><><>

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கான தாய்மாமன் தங்க மோதிர திட்டத்தில் நிபந்தனை தளர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தையின் தாய், தமிழ்நாட்டில் பிறந்து, திருமணமாகி வெளிமாநிலத்திற்கு சென்றிருந்தாலும் அத்தாயின் பெற்றோர் தமிழ்நாட்டில் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருந்து அதற்கான உரிய ஆவண ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அந்த

குழந்தைக்கும் இத்திட்டத்தின்கீழ் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திருத்தம் கடந்த ஜுன் மாதம் 22 ஆம் தேதி முதல் அரசு மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகளுக்கு பொருந்தும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<><><><><><><><><>

தமிழகத்தில் கடந்த தி.மு.க. ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை தற்போதைய அரசு தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்ட தோழி விடுதிகள் திட்டத்தை பாராட்டி உலக வங்கி வெளியிட்டுள்ள கட்டுரையை அவர் பகிர்ந்துள்ளார்.

அத்துடன், பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் 20 சதவீதம் பேர் நாட்டின் முன்னணி உயர்க்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர் என்றும், திரு. மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

<><><><><><><><><>

சேலத்தில் இருந்து பெங்களூர், கொச்சி, ஹைதராபாத் ஆகிய நகரங்களுக்கு இயக்கப்பட்டு வந்த விமான சேவை, இம்மாதம் 16 ஆம் தேதி முதல் நிறுத்தப்பட உள்ளதாக விமான நிலைய இயக்குநர்

திரு. நவ்ஷாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பிராந்திய இணைப்புத்திட்டம் காலாவதியாவதையொட்டி, இந்த விமான சேவைகள் நிறுத்தப்பட உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இம்மாதம் 25 ஆம் தேதி முதல் சேலத்தில் இருந்து சென்னைக்கு நாள்தோறும் 2 விமானங்கள் இயக்கப்பட உள்ளதாகவும் அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<><><><><><><><>

தமிழகத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மீற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தேனி, தென்காசி, திண்டுக்கல், தஞ்சாவூர், கரூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் சில பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

<><><><><><><><>

*இருவரிச் செய்திகள்*

இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் - கானா பயிர் ஆராய்ச்சி நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கானாவில் கையெழுத்தானது.

<><><><><><><><>

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி படையினர் சவூதி அரேபியாவில் 2 விமான நிலையங்களை தாக்கியதை அடுத்து மேற்காசியாவில் பதற்றம் அதிகரித்துள்ளது.

<><><><><><><><>

கருங்கடலில் வர்த்தக கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

<><><><><><><><>

ஃப்ளை துபாய் விமானத்தில் சக விமானியால் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் இந்திய தலைமை விமானி ஸ்மித் மச்சார் நலமுடன் இருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<><><><><><><><>

இந்திய விமானப்படையின் 94 ஆம் ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

<><><><><><><><>

08 10 2026 6 45 இருவரிச் செய்திகள் – 2 ஓவிய மற்றும் சிற்பத்துறையில் சிறந்த கலை நூல்களை பதிப்பித்த நூலாசிரியர்களுக்கான பரிசுத் தொகைக்கு இம்மாதம் 20 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு கலை பண்பாட்டுத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

<><><><><><><><>-

பராமரிப்பு பணிகள் காரணமாக தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் இன்று மாலை 4 மணிவரை குடிநீர் விநியோகிக்கப்படாது என்று ஆணையர் பிரியங்கா தெரிவித்துள்ளார்.

<><><><><><><><>

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அடிப்படை வசதிகள் குறித்து ஆட்சியர் திரு. சரவணன் ஆய்வு மேற்கொண்டார்.

<><><><><><><><>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு அடையாள எண் வழங்கும் பணியை இம்மாதத்திற்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று அலுவலர்களுக்கு ஆட்சியர் திருமதி. பத்மஜா அறிவுறுத்தியுள்ளார்.

<><><><><><><><>

08 10 2026 6 45 இருவரிச் செய்திகள் – 3

சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் பெறப்பட்ட 84 புகார் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு காவல் ஆணையாளர்

திரு. அமல்ராஜ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

<><><><><><><><>

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியின் தொடக்க நிகழ்ச்சியில் பேட்மிண்டன் வீரர் பிரமோத் பகத்தும், டேபிள் டென்னிஸ் வீராங்கனை பவினா படேலும் தேசியக்கொடியை ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி ஜப்பானில் இம்மாதம் 18 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

<><><><><><><><>

துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – துருக்கியின் Doga Turkmen இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 6-3, 6-1 என்ற செட்கணக்கில் துருக்கியின் Asya Yilmaz – Illay Yoruk இணையை வென்றது.

மற்றொரு முதல்சுற்று போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே – ஆஸ்திரேலியாவின் Elena Micic இணை வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<><><><><><><><>

இந்த இணை 6-3, 6-3 என்ற செட்கணக்கில் போலந்தின் Weronika – அமெரிக்காவின் Alana Smith இணையை வென்றது.

<><><><><><><><>

இந்தியா – ரஷ்யா அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் நட்புணர்வு கால்பந்து போட்டி கொல்கத்தாவில் இன்று நடைபெறுகிறது.

<><><><><><><><>